# வலுவான ஒன்ராறியோவை உருவாக்குதல்

## *2023 வரவுசெலவுத் திட்டம்* தற்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் உரிய நெகிழ்ச்சியான பொருளாதாரத்திற்கான ஒரு திட்டத்தை வழங்குகின்றது

ரொறன்ரோ - இன்று, நிதி அமைச்சர் Peter Bethlenfalvy ஒன்ராறியோவின் *2023 வரவு செலவுத் திட்டத்தை* வெளியிட்டார்: *வலுவான ஒன்ராறியோவை உருவாக்குதல்*. இது தொடர்ந்துகொண்டிருக்கும் உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற நிலைமையில், எதிர்காலச் சந்ததியினருக்கு வலுவான நிதி அஸ்திவாரத்தை அமைக்கும் அதே வேளையில், தற்காலத்தில் மக்களுக்கும் வணிகங்களுக்கும் உதவும் நோக்குடன் பொறுப்புடனும், இலக்கை நோக்கிய அணுகுமுறையுடனும் வழிநடத்தும் ஒரு திட்டமாகும்.

"ஒன்ராறியோவின் பொருளாதாரம் மீளும் திறனுடன் உள்ளது, ஆனால் முன்னோக்கிச் செல்லும் பாதை தொடர்ந்தும் நிச்சயமற்றதாகவே உள்ளது" என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். "இந்த சவால்களை எதிர்கொள்வதற்கு எங்கள் அரசாங்கத்திடம் சரியான திட்டம் உள்ளது. எதிர்காலத்திற்கான வலுவான பொருளாதாரம் மற்றும் மாகாணம் முழுவதிலும் வளர்ச்சியை ஆதரிக்கத் தேவையான உட்கட்டமைப்பு ஆகியவற்றைக் கொண்டிருக்கக்கூடிய முறையில் நாங்கள் ஒன்ராறியோவைக் கட்டியெழுப்பி வருகின்றோம்.

பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்காகச், செலவுகளைக் குறைத்தல், முக்கிய உட்கட்டமைப்புத் திட்டங்களை விரைவாகக் கட்டியெழுப்புதல், வணிகங்கள், குடும்பங்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு உதவுமுகமாக அதிக வேலைகளையும் முதலீடுகளையும் தன்வயமாக ஈர்த்தல் ஆகிய குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை அரசாங்கத்தின் இந்தத் திட்டம் முன்னெடுத்து வருகின்றது.

சிறப்பம்சங்களில் அடங்குபவை:

- உள்ளூர் உற்பத்தியாளர்கள் தங்கள் செலவுகளைக் குறைக்கவும், தொழிலாளர்களில் முதலீடு செய்யவும், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கவும், அத்துடன் போட்டியிட்டு முன்னேறவும் உதவுவதற்காக, 10 சதவிகிதத்தைத் திரும்பப்பெறக்கூடிய வண்ணம் Corporate Income Tax credit (கூட்டுறவு வருமான வரிக் கழிவு) தொகையை வழங்கக்கூடிய Ontario Made Manufacturing Investment Tax Credit ஐப் (ஒன்ராறியோ உற்பத்தி முதலீட்டு வரிக் கழிவு) புதிதாக அறிமுகப்படுத்துதல்.

- வடக்கு ஒன்ராறியோவில் உள்ள தொழில்கள், வளங்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோருக்கும், ஒன்ராறியோவை அடிப்படையாகக் கொண்ட மின்சார வாகனம் (EV) மற்றும் பேட்டரி உற்பத்தி உட்படத் தெற்கு ஒன்ராறியோவின் உற்பத்திகளுக்கும் இடையே சிறந்த விநியோகச் சங்கிலி இணைப்புகளை ஏற்படுத்துவதற்காக, ஒன்ராறியோவின் முக்கியமான கனிம மூலோபாயத்தை (Critical Minerals Strategy) மேம்படுத்துதல். ஒன்ராறியோ ஆரம்பநிலை ஆய்வுத் திட்டத்தில் (Ontario Junior Exploration Program) 2023–24 இல் 3 மில்லியனையும், 2024–25 இல் $3 மில்லியனையும் மேலதிகமாக அரசாங்கம் முதலீடு செய்கின்றது. Ring of Fire க்குச் செல்லும் சாலைகளை அமைக்கும் பணியை அரசு தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.
- ஒன்ராறியோவிலுள்ள St. Thomas இல் Volkswagen AG இன் துணை நிறுவனமான EV பேட்டரி உற்பத்தி வசதியை நிறுவுவதற்கான மிக சமீபத்திய அறிவிப்புக்கு முன்னராகவே, EV விநியோகச் சங்கிலியில் ஒன்ராறியோவை உலகளாவிய ரீதியில், முன்னணியில் நிலைநிறுத்துவதற்காக, உலகளாவிய வாகன உற்பத்தியாளர்கள் மற்றும் EV பேட்டரிகள் மற்றும் பேட்டரி பொருட்களின் சப்ளையர்களை $16 பில்லியனுக்கும் அதிகமான முதலீடுகள் மூலம் தன்வயமாக ஈர்த்தல்.
- எதிர்கால Bradford Bypass இன் குறுக்கே பாலம், Kitchener மற்றும் Guelph இடையே புதிய Highway 7 க்கான அடுத்த கட்டக் கட்டுமானம், Pickering இலிருந்து கிழக்கு ஒன்ராறியோ வழியாக Highway 401ஐ விரிவுபடுத்துவதற்கான வேலைகள் உள்ளடங்கிய முக்கியமான உட்கட்டமைப்புத் திட்டங்களின் கட்டுமானத்தைத் தொடங்குதல், அத்துடன் Highway 413 ஐ உருவாக்குவதற்கான திட்டங்களுடன் முன்னேறுதல் ஆகியவற்றின் மூலம் வாகன நெரிசலைத் தளர்த்தல், வேலைகளை உருவாக்குதல் மற்றும் சமூகங்களை இணைத்தல்.
- 2023–24 இல் $224 மில்லியனைத் திறன் மேம்பாட்டு நிதியத்தின் (Skills Development Fund) புதிய மூலதனத்திற்காக வழங்கித், தனியார் துறை நிபுணத்துவத்தைப் பயன்படுத்தியும், தொழிற்சங்கப் பயிற்சிக் கூடங்கள் உள்ளிட்ட பயிற்சி மையங்களை விரிவுபடுத்தியும், தொழிலாளர்களுக்கு அணுகக்கூடிய முறையில், நெகிழ்வான பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்.
- திறன்கள் தொடர்பான வர்த்தகத் துறைக்குத் தேவைப்படும் நிபுணர்கள் உட்பட மேலும் திறமையான தொழிலாளர்களை மாகாணத்திற்கு ஈர்க்கும் வகையில், மூன்று ஆண்டுகளில் $25 மில்லியன் மேலதிகத் தொகையால் ஒன்ராறியோக் குடிவரவாளர் நியமனத் திட்டத்தை (Ontario Immigrant Nominee Program) மேம்படுத்துதல்.

தொழிலாளர்களுக்காகச் செயற்படுதல், செலவுகளைக் குறைத்தல், சிறந்த சேவைகளை வழங்குதல் ஆகியவற்றின் மூலம், ஒன்ராறியோவின் திட்டத்தில் பங்கேற்கவும், பயன்பெறவும் அனைவருக்கும் வாய்ப்புக் கிடைக்கும். சிறப்பம்சங்களில் அடங்குபவை:

- Toronto மற்றும் Peel பிராந்தியங்களில் உள்ள Runnymede Healthcare Centre இன் முதற் பதிலாளிகள் நலவாழ்வு மற்றும் புனர்வாழ்வு மையத்தில், இரட்டைக் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதன் மூலம், அடுத்த சுற்று ஒப்புதலை நோக்கித் திட்டத்தின் வளர்ச்சியை விரைவுபடுத்தி, அதிர்ச்சி அனுபவத்துக்குப் பின் ஏற்படும் மனஉளைச்சல் கோளாறு மற்றும் பிற மனநலக் கோளாறுகளை அனுபவிக்கும் முதற் பதிலாளிகளுக்குத் தொடர்ச்சியான கவனிப்பை வழங்குவதற்காக $9.6 மில்லியன் தொகையை முதலீடு செய்தல்
- மேலதிகமாக 100,000 முதியவர்கள் திட்டத்திற்குத் தகுதிபெறுவதைக் காணவும், ஆண்டுதோறும் பணவீக்கத்திற்கு ஏற்றபடி பலன்களை மாற்றவும், ஜூலை 2024 முதல், Guaranteed Annual Income System (GAINS - உத்திரவாத வருடாந்த வருமான முறை) திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான மாற்றங்களை முன்மொழிவதன் மூலம் அதிக முதியவர்களுக்கு நிதி உதவியை வழங்குதல்.
- தற்போது நிலவும் வீட்டு வசதி நெருக்கடியைச் சமாளிக்கப், புதிய பெரிய அளவிலான நோக்கத்திற்காக கட்டப்படும் வாடகை வீட்டுத் திட்டங்கள் அனைத்திலும் Harmonized Sales Tax ஐ (HST - இணக்கமான விற்பனை வரி) ஒத்திவைக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளல். வாடகை வீடுகளை அதிகமாகக் கட்டமைப்பதற்கு உதவும் அதே வேளையில், வேலைகளை உருவாக்கவும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும், வளர்ச்சியை ஆதரிக்கவும் உதவும் இந்த நடவடிக்கையை ஒன்ராறியோ ஆதரிக்கும்,
- வீடற்ற நிலை ஏற்படும் அபாயத்தில் உள்ளவர்கள், மனநலப் பிரச்சனை மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டினால் கஷ்டப்படுபவர்கள், நெருக்கமான துணைவரின் வன்முறையில் இருந்து தப்பித்து வாழ்பவர்கள் ஆகியோருக்கு உதவுவதற்கும், ஆதரவான வீடுகளை வழங்கும் சமூக நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்கும், வீடற்றோர் தடுப்புத் திட்டம் (Homelessness Prevention Program) மற்றும் சுதேசி ஆதரவு வீட்டுத் திட்டத்தின் (Indigenous Supportive Housing Program) கீழ் ஒவ்வொரு ஆண்டும் ஆதரவளிக்கும் வீடுகளில் மேலதிகமாக $202 மில்லியன் தொகையை முதலீடு செய்தல்.
- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சி பெறும் ஒன்ராறியோ வாசிகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்காக, இளங்கலை மாணவருக்கு மேலதிகமாக 100 இடங்களை 2023 இலும், முதுகலை மருத்துவப் பயிற்சிக்கு மேலதிகமாக 154 இடங்களை 2024 இலும் அதிகரிப்பதற்காக மூன்று ஆண்டுகளில் $33 மில்லியனை முதலீடு செய்வதன் மூலம் அதிகமான ஒன்ராறியோ மாணவர்கள் மருத்துவர்களாக மாற உதவுதல். மாகாணத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில், இளங்கலைப் பட்டப் படிப்புகளுக்கான முன்னுரிமை ஒன்ராறியோக் குடியிருப்பாளர்களுக்குத் தொடர்ந்தும் வழங்கப்படும்.
- பொதுவான நோய்களாகிய லேசானது முதல் மிதமான acne, canker sores, diaper dermatitis, ஈஸ்ட் தொற்று, pinworms மற்றும் threadworms அத்துடன் கர்ப்ப காலத்தில் ஏற்படும் குமட்டல் மற்றும் வாந்தி ஆகியவற்றுக்கு மருந்தாளர்கள் மருந்துகளைப் பரிந்துரைக்கும் திட்டத்தை 2023 இலையுதிர்காலத்தில் தொடங்கி விரிவுபடுத்துதல்.

- சமூக அடிப்படையிலான மனநலம் மற்றும் போதை அடிமைத்தனத்துக்கு உரிய சேவை வழங்குநர்களின் அடிப்படை நிதியில் ஐந்து சதவீத அதிகரிப்புடன், சுகாதார அமைச்சினால் நிதியளிக்கப்படும் மனநலம் மற்றும் போதை அடிமைத்தன சேவைகளில் அதிகமான மக்களை இணைப்பதற்கு மூன்று ஆண்டுகளில் $425 மில்லியன் தொகையைக் கூடுதலாக வழங்குதல்.
- மேலதிகமான மக்கள் தங்கள் சொந்த வீடு மற்றும் சமூகத்துடன் இணைந்து வசதியாக வாழ வழியமைப்பதற்காக, *2022 பட்ஜெட்டில்* உறுதியளித்தமைக்கு ஏற்பத் தொடர்ந்து மூன்று ஆண்டுகளில் $1 பில்லியன் தொகையை முதலீடு செய்தல். வீடு மற்றும் சமூகப் பராமரிப்புப் பணியாளர்களின் சேவையை ஸ்திரப்படுத்தும் நோக்கில், அவர்களின் ஒப்பந்த ஊதிய விகித அதிகரிப்பை ஆதரிப்பதற்குக் கிட்டத்தட்ட $300 மில்லியன் தொகையுடன், நிதியுதவியை 2023–24 இல் $569 மில்லியனாகக் கொண்டு வருவதற்கான முதலீடுகளை அரசாங்கம் இப்போது துரிதப்படுத்தி வருகின்றது. இந்த நிதியுதவியானது வீட்டுப் பராமரிப்புச் சேவைகளை விரிவுபடுத்துவதோடு, பராமரிப்பின் தரத்தை மேம்படுத்தி, மக்கள் பராமரிப்புச் சேவைகளுடன் இணைவதை எளிதாகவும் வேகமாகவும் இடம்பெறச் செய்யும்.
- சிறுவர் நல அமைப்பிலிருந்து வெளியேறும் இளைஞர்கள், நிதிச் சுதந்திரத்தை அடைவதற்கு உதவ, வாழ்க்கைத் திறன்கள் மேம்பாடு, இரண்டாம் நிலைக் கல்வி, பயிற்சி மற்றும் வேலைக்கான பாதைகள் ஆகியவற்றை ஆதரிப்பதற்காக, மூன்று ஆண்டுகளில் $170 மில்லியன் தொகையை முன்னேற்றப் பாதைத் (Ready, Set, Go) திட்டத்தில் முதலீடு செய்வதன் மூலம் அந்த இளைஞர்களுக்கான நீண்ட காலப் பலன்களை மேம்படுத்துதல்.

"சிந்தனைமிக்க, வெளிப்படையான எங்கள் அணுகுமுறையுடன், ஒன்ராறியோ முழுவதும் உள்ள குடும்பங்கள், தொழிலாளர்கள் மற்றும் வணிகங்களுக்கு ஆதரவை வழங்கும் அதே வேளையில், வரவு செலவுத் திட்டத்தைச் சமநிலைப்படுத்தும் திட்டத்தையும் நாங்கள் கொண்டுள்ளோம்" என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். “இந்த மாகாண மக்கள் இன்று மட்டுமல்ல, எதிர்காலத்திலும் பெருமைப்படக் கூடிய விதத்தில் ஒரு ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புவதற்கான இந்த அணுகுமுறையை நாங்கள் தொடர்ந்தும் முன்னெடுப்போம். வலுவான ஒரு ஒன்ராறியோ."

கடந்த பட்ஜெட்டில் முன்னறிவிக்கப்பட்டதை விட மூன்று ஆண்டுகளுக்கு முன்னராகவே, பட்ஜெட்டை 2024-25 இல் சமநிலைப்படுத்தும் திட்டத்துடன், ஒன்ராறியோவின் பொருளாதாரம் மற்றும் நிதிக் கண்ணோட்டம் பற்றிய ஒரு புதுப்பிப்பை இந்த அரசாங்கம் வழங்குகின்றது.

## *விரைவுச் செய்திகள்*

- ஒன்ராறியோவின் 2022–23 பற்றாக்குறை $2.2 பில்லியன் - *2022 பட்ஜெட்டில்* வெளியிடப்பட்ட கண்ணோட்டத்தை விட $17.7 பில்லியன் குறைவாகவும்,*2022-23 மூன்றாம் நிதியக் காலாண்டில்* வெளியிடப்பட்ட கண்ணோட்டத்தை விட $4.4 பில்லியன் குறைவாகவும் இருக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது.

- அரசாங்கம் 2023-24 இல் $1.3 பில்லியன் பற்றாக்குறையைக் கணித்துள்ளது மற்றும் *2022 பட்ஜெட்டில்* முன்னறிவிக்கப்பட்டதை விட மூன்று ஆண்டுகளுக்கு முன்னராகவே, 2024-25 இல் $0.2 பில்லியனை மிகுதியாகப் பதிவு செய்யும் பாதையில் உள்ளது. அரசாங்கம் 2025-26 இல் $4.4 பில்லியன் மிகுதியாக இருக்கும் என்றும் கணித்துள்ளது. இது ஒரு நேர்மறையான புதுப்பிப்பாக இருந்தாலும், குறிப்பிடத்தக்க பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மை நீடித்துக் கொண்டு தான் இருக்கின்றது.
- ஒன்ராறியோவின் உண்மையான GDP 2022 இல் 3.7 சதவிகிதம் என மதிப்பிடப்பட்டுள்ளது அத்துடன், 2023 இல் 0.2 சதவிகிதத்தாலும், 2024 இல் 1.3 சதவிகிதத்தாலும், 2025 இல் 2.5 சதவிகிதத்தாலும் மற்றும் 2026 இல் 2.4 சதவிகிதத்தாலும் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. விவேகமான நிதித் திட்டமிடல் நோக்கங்களுக்காக, இந்தக் கணிப்புகள் யாவும் தனியார் துறைக் கணிப்புகளின் சராசரியை விடச் சற்றுக் குறைவாகவே உள்ளன.
- நிகர கடன்-GDP விகிதம் 2022-23 இல் 37.8 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது - இது 2011-12 க்குப் பின்னர் இருக்கும் மிகக் குறைந்த அளவாகும். நடுத்தரக் கால கண்ணோட்டத்தில், ஒன்ராறியோவின் நிகரக் கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் (GDP) 2023-24 இல் 37.8 சதவீதமாகவும், 2024-25 இல் 37.7 சதவீதமாகவும், 2025-26 இல் 36.9 சதவீதமாகவும் குறையும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

## மேலதிக வளங்கள்

வாசிக்கவும்*2023 வரவுசெலவுத் திட்டம்: வலுவான ஒன்ராறியோவை உருவாக்குதல்*

வாசிக்கவும்இந்த அரசாங்கத் திட்டத்தின் சிறப்பம்சங்கள்

வாசிக்கவும்பொருளாதார மற்றும் நிதிக் கண்ணோட்டம்

வாசிக்கவும்*2022 ஒன்ராறியோப் பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் நிதி மதிப்பாய்வு - ஒன்ராறியோவின் கட்டியெழுப்பும் திட்டம்: முன்னேற்றம் குறித்த ஒரு புதுப்பிப்பு*

---

**ஊடகத் தொடர்புகள்**

ontario.ca/finance-news
*Disponible en français*

Emily Hogeveen
அமைச்சர் அலுவலகம்
647-294-6166
Emily.Hogeveen@ontario.ca

Scott Blodgett
தகவற் தொடர்புப் பிரிவு
416-728-9791
Scott.Blodgett@ontario.ca